**B**

# CCE RR/PR/ NSR/NSPR
## Reduced Syllabus

ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ,
ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD, MALLESHWARAM, BENGALURU – 560 003**

ಜೂನ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ - 2

**JUNE 2024 EXAMINATION - 2**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

**MODEL ANSWERS**

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T** CODE NO. : **10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

**Subject : First Language — TAMIL**

(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)

(**Regular Repeater / Private Repeater / NSR / NSPR**)

ದಿನಾಂಕ : 14. 06. 2024 ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100

**Date : 14. 06. 2024 ] [ Max. Marks : 100**

**I.** கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுதல் : **6 × 1 = 6**

1. பொருளுடைய சொற்கள் பல அடுக்கி வருவது

   (A) வினைச்சொல் (B) அடுக்குத்தொடர்

   (C) வினைத் தொடர் (D) உரிச்சொல்

   ***Ans. :***

   (B) அடுக்குத்தொடர்

2. செய்யுளில் இரண்டு சீர்களைப் பெற்று வருவது

   (A) அளவடி (B) நெடிலடி

   (C) குறளடி (D) சிந்தடி

   ***Ans. :***

   (C) குறளடி

3. கடி அரண் ‘கடி’ என்பது

(A) இயற்சொல் (B) உரிச்சொல்

(C) வினைச்சொல் (D) இடைச்சொல்

***Ans. :***

(B) உரிச்சொல்

4. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல்

(A) கரந்தை (B) வெட்சி

(C) உழிஞை (D) தும்பை

***Ans. :***

(B) வெட்சி

5. தங்கம் ‘பள, பள’ என்று மின்னியது என்றத் தொடரில் ‘பள, பள’ என்பது

(A) ஆகுபெயர் (B) இரட்டைக்கிளவி

(C) அடுக்குத்தொடர் (D) அடிச்சொல்

***Ans. :***

(B) இரட்டைக்கிளவி

6. வெண்பாவின் ஓசை

(A) தூங்கல் (B) துள்ளல்

(C) செப்பல் (D) அகவல்

***Ans. :***

(C) செப்பல்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புக : 4 × 1 = 4**

7. புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்;
மகாகவி : ........................... .

***Ans. :***

பாரதியார்

8. என்னுடைய நாடு, இந்திய நாடு;

நல் அமுது : .......................... .

***Ans.* :**

தமிழ்மொழி

9. வயலும் வயல் சார்ந்த இடமும், மருதம்

காடும் காட்டைச் சார்ந்த் இடம் : .......................... .

***Ans.* :**

முல்லை

10. 'அயர்வு' என்பது சோம்பல்

முனிவு என்பது : .......................... .

***Ans.* :**

கோபம்

**III. ஒரு தொடரில் விடை தருதல் : 7 × 1 = 7**

11. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார் ?

***Ans.* :**

ஒளி வடிவில்

12. பரந்த அறிவாற்றல் உடையவரைப் பழிப்பது எதனைப் போன்றது ?

***Ans.* :**

பாசிபைப் போன்றது.

13. தலைவி என்ன சமைத்தாள் ?

***Ans.* :**

புளிப்பையுடையக் குழம்பை

14. அனல் மின்சாரத்தைத் தரும் பொருள் யாது ?

***Ans.* :**

நிலக்கரி

15. அதியமான் நெல்லிக்கனியை யாருக்குக் கொடுத்தான் ?

***Ans.* :**

ஔவைக்குக்

16. இளைஞனின் நண்பன் எது ?

***Ans.* :**

இலட்சியம்

17. மோனை நயத்துடன் கூறிய விடுகதை ஒன்றை எழுதுக.

***Ans.* :**

விண்ணைச் சிரிக்கச் செய்வாள்

கண்ணைப் பறிக்கச் செய்வாள் - அவள் யார் ?

மின்னல்

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருதல் : 10 × 2 = 20**

18. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

***Ans.* :**

i) ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம் 1

ii) ஒழுக்கத்தை கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு. 1

19. தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினை எழுதுக.

***Ans.* :**

i) முற்றிய கட்டித் தயிரைப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட 1

ii) ஆடையைத் துவைக்காமல் உடுத்துக் கொண்டு புளிப்பை உடைய குழம்பை சமைத்தாள். 1

20. பெண்கள் எதை வெட்டி விட்டோமென்று கும்மியடித்தனர் ?

***Ans.* :**

i) மாட்டையடித்து வசக்கித் தொழுவில் கட்டும் பழக்கத்தை வீட்டினில் எம்மிடங்காட்ட 1

ii) வந்தார் அதை வெட்டி விட்டோமென்று கும்மியடித்தனர். 1

21. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

***Ans.* :**

i) வாலை ஒட்ட நறுக்கினாலும் நாயின் நன்றி காட்டும் இயல்பு மாறுவதில்லை. 1

ii) பால் வார்த்தாலும் பாம்பு தன் விஷத்தைக் குறைக்காது. 1

22. மேலை நாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகிறது ?

***Ans.* :**

i) பண்பாட்டையும், நாகரீகத்தையும் விளக்கும் 1

ii) நற்கலையாகவே போற்றப்படுகின்றது. 1

23. 'நீதி சாரம்' என்ற நூல் பற்றி எழுதுக.

***Ans.* :**

i) கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலே எழுதப்பட்ட நூல். இது ஓலைச்சுவடி. 1

ii) இதனை தருமபுரி தொல்லியல் துறை கண்டுபிடித்திருந்தது. இதில் 'மரம் வளர்த்தால் நரகம் இல்லை' 1

24. குழந்தைகளை ஏற்றிக் கொண்டு பஸ்கள் எவ்வாறு நகரத்திற்கு செல்லும் ?

***Ans.* :**

i) தீப்பெட்டிக்குள்ளே குச்சிகளை அடுக்குகிறதைப் போல அந்தப் பிள்ளைகளைத் தனக்குள்ளே அடுக்கிக் கொண்டு 1

ii) வயிறு புடைக்கத்தின்று முடித்த ஒரு ராட்சசன் விடும் ஏப்பம் போல ஹாரன் ஒலியை எழுப்பி செல்லும். 1

25. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுது.

***Ans.* :**

i) நான்கு சீரால் இயன்ற அளவடிகள் பெற்று இயற்சீராய் வரும். அயற்சீர் விரவியும், 1

ii) ஆசிரியத்தளை முகுதியும் பெற்று பிறதளை மயக்கியும். அகவல் ஓசைபெற்று மூன்று முதல் அடிகளாக வருவது. 1

26. கவிஞர் ஈரோடு தமிழன்பன் எதனைக் களாவை விட இனிது என்கிறார் ?

***Ans.* :**

i) பலா என்பது பகற்கனவு தான் ! எனவே ! முயற்சி செய் ! அம்முயற்சியில் பட்டினியே உனக்குக் கதி என்றாலும் பட்டினி கிட ! 1

ii) எதிர்காலத்தில் பலாவையே உண்பது என உறுதியான விரதம் கொள். 1

27. விடுகதை என்பதை விளக்குக.

***Ans.* :**

i) கேட்போரின் எண்ணத்தைக் கிளரச் செய்து, அதன் பொருளை அறிய ஊக்குவிக்கும், 1

ii) சிந்தனைக் கருவியாகும். விடுவிக்கப்பட வேண்டிய கதை என அழைக்கப்படுகின்றது 1

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுதல் : $4 \times 3 = 12$**

28. உழவுத் தொழிலின் உயர்வையும் உழவர்களின் உயர்வையும் வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

***Ans.* :**

i) மற்றவர்கள் உண்ணும் உணவை உழுது கொடுத்துத் தாமும் உண்டு வாழ்பவரே வாழ்பவர் எனப்படுபவர் 1

ii) வாழ்பவரே வாழ்பவர் எனப்படுபவர் பிறர் அவர் பின் செல்பவர் ஆவர். தன் கையால் 1

iii) உழுபவர் பிறரிடம் சென்று இரக்கமாட்டார் தம்மிடம் இரப்பவர்க்கு ஒளிக்காமல் கொடுப்பார். 1

29. தாய், தந்தை, கொல்லன், அரசன், மகன் செய்ய வேண்டிய கடமைகள் யாவை ?

***Ans.* :**

i) நற்பண்புகள் நிறைந்தவனாக்குதல் தந்தையின் கடமையாகும். பெற்று வளர்த்து விடுதல் தாயின் கடமையாகும். 1

ii) வேலை கூர்மையானதாக வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமையாகும். நல்லொழுக்கத்தை கற்பிப்பது நாடாளும் வேற்தனின் கடமையாகும். வாளை எடுத்தும் சென்று போரில் களிறெறிந்து மீளுவது மகனின் கடமையாகும். 2

30. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளில் ஒன்றினை எழுதுக.

***Ans.* :**

i) வடதுருவம் தென் துருவம் இங்கேயிருக்கும் பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். அதனாலே கடல் மட்டம் உயரும் 1

ii) பல தீவுகள் மூழ்க வேண்டி நிலைமைக்கு ஆளாயிடும். 1

iii) எல்லோரும் வேறிடம் பார்க்க வேண்டியது தான். 1

31. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?

***Ans. :***

i) தச்சாசாரிகளும், கொல்லாசாரிகளும் தூக்குச்சட்டிகளில் சோற்றை எடுத்துக் கொண்டு 1

ii) டவுன் பஸ்ஸை பிடிக்க தயாராகிறார்கள். மற்றவர்களும் தினப்படி கூலி வேலைகளுக்கு நகரத்திற்கு 1

iii) போய் வருகின்றனர். நகரத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் கூலித்தொகை கிறாமத்தில்கிடைக்காவ. 1

**VI. குறிப்பு வரைதல் : 2 × 3 = 6**

32. மாணிக்கவாசகர்

***Ans. :***

i) சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் இவர் திருவாதவூரில் பிறந்தார். அரிமர்த்ன பாண்டியனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார்.

ii) பாண்டியனுக்காக குதிரை வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர். திருவாசகமும், திருக்கோவையாரும் இயற்றினார் காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு

33. திருக்குறள்

***Ans. :***

i) உலகப் பொதுமறை என்று போற்றப்படும் நூல் திருக்குறள் இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

ii) அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது. மொத்தம் 1330 குறட்பாக்களையும் 133 அதிகாரத்தையும் பெற்றது.

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

34. வேற்றுமை அணி

***Ans. :***

வெளிப்படையாகவேணும், குறிப்பாகவேணும் இருபொருள்களுக்கிடையே அமைந்த ஒப்புமையை புலப்படும் வண்ணம் இரண்டையும் ஒன்றாகக் காட்டி வேற்றுமையைக் கூறுவது.

(சான்று) : தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

தீ சுடும், நாவினால் கூறியச் சொல்லும் சுடும் இது ஒத்த செயல்.
சுட்டபுண் ஆறும், நாவினால் சுட்டபுண் வடுவாகி ஆறாமல் நிற்பது.

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குதல் : 3 × 3 = 9**

35. ''பால் வார்த்தாலும்
விஷம் குறைக்காது பாம்பு''

***Ans. :***

இடம் : ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் எழுதிய இயல்பு என்னும் செய்யுளில் இடம் பெற்றுள்ளது. இவ்வரிகள். 1

விளக்கம் : பால் வார்த்தாலும் பாம்பானது தனது விஷத்தைக் குறைக்காத இயல்புடையது. 2

36. ''அந்த அம்மையாரை அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது''.

***Ans. :***

இடம் : இவ்வரிகள் பேராசிரியர் மு.வ. எழுதிய வானம்பாடி என்னும் பாடத்தில் இடம்பெற்றுள்ளது. 1

விளக்கம் : ஒரு தோட்டத்தில் வேலியில் உள்ள செடியில் கீரை பறித்தார். திரு.வி.க. வின் நண்பர் யாரது யாரம்மா ? அது செடிக்கு இலையில்லாமல் இன்றே போய்விடும் போல என விரட்டி விட்டார். திரு.வி.க. வின் மனம் அவர் பேசுவதில் லயிக்கவில்லை. அந்த அம்மையாரை அப்படி கூறியிருக்கக் கூடாது என வருந்தினார். 2

37. ''அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே உனக்கு முதுமை வந்து விடும்''.

***Ans. :***

இடம் : வைரமுத்து எழுதிய இலட்சியம் என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ளது. 1

விளக்கம் : நமது கல்வி, விரல்களைத்தான் வேலை வாங்குகிறதோ தவிர மூளையையும் மனசையும் அது முழுமையாக்கவில்லை. அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே உனக்கு முதுமை வந்துவிடும். 2

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குதல் : 1 × 3 = 3**

38. ''நுணலும் தன் வாயால் கெடும்''.

***அல்லது***

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''.

***Ans. :***

மணலுள் மறைந்து வாழும் தவளையானது கத்துவதனால் பாம்பிடம் அகப்படுவதைப்போல, பிறரைப் பற்றிப் புறங்கூறும் அறிவிலிகள் தங்களை வெளிப்படுத்தி அகப்படுவர். 3

பாசி போன்ற அடாத சில

*அல்லது*

***Ans. :***

ஒருவரின் முகக் குறிப்பினைப் பார்த்தே அவர் உள்ளத்தின் இன்ப, துன்பங்களை அறியலாம். 3

**X. அடிபிறழாமல் எழுதுதல் : 1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும் .....'' எனத் தொடங்கும் 'திருவாசகப்' பாடலை எழுதுக.

*அல்லது*

''முளி தயிர் பிசைந்த ..... '' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலினை எழுதுக.

***Ans. :***

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
    ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம் 2
    அறுக்கும் ஆனந்த மா கடலே
தீது இலா நன்மைத் திருவருள் குன்றே

திருப் பெருந்துறை உறை சிவனே
யாதுநீ போவது ஓர் வகை அருளாய் 2
வந்து நின் இணை அடி தந்தே. - மாணிக்கவாசகர்

*அல்லது*

***Ans. :***

முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம். கழாஅது உடீஇக்
குவளை உண்கன் குய்ப்புகை கமழத் 2
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே. 2

- கூடலூர் கிழார்

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருதல் : 2 × 4 = 8**

40. உனக்கு தெரிந்த விடுகதைகள் இரண்டினை எழுதி விளக்குக.

***Ans.*** **:**

i) அழகு அழகாய்ப் பூப்பூக்கும்
அம்மாடி என்று காய்காய்க்கும் - அது என்ன ?
நெருஞ்சி - அதில் அடிதோறும் முதலெழுத்தாகிய ‘அ’, ‘அ’ என ஒன்றிவருவதால் இது மோனை ஆகும். 2

ii) விண்ணைச் சிரிக்கச் செய்வாள்
கண்ணைச் பறிக்கச் செய்வாள் - அவள் யார் ?
மின்னல் - இதில் அடிதோறும் இரண்டாம் எண்ணாகிய விண், கண் என வந்துள்ளதால் இது எதுகையாகும். 2

41. கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை கி. ராஜநாராயணன் வழிநின்று விளக்குக.

***அல்லது***

பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகள் எவையெவை என்று இளம்பெருவழுதி பட்டியலிடுகின்றார்.

***Ans. :***

i) முன்பெல்லாம் மாலையில் தெருக்களில், கோவில்களிலும், மைதானத்திலும் குழந்தைகள் ஓடி ஆடும் விளையாட்டுக் கூச்சல் கேக்கும். 1

ii) வகை வகையான கிராமிய விளையாட்டுகள், கற்பனை சம்பாஷணைகளோடு கூடிய விளையாட்டுகள், 1

iii) பாடிக் கொண்டே விளையாடும் விளையாட்டுகள் இப்படி இவர்கள் பரம்பரையாக விளையாடிக் கொண்டு வந்தார்கள். 1

iv) அந்தக் குழந்தைகள் இப்போது தீப்பெட்டி ஆபீஸ் வேலைக்காக டவுனுக்குப் பஸ்ஸில் சென்று வருகின்றனர். 1

***அல்லது***

***Ans. :***

i) இந்திரனுக்குரிய அமிழ்தமே கிடைத்தது என்றாலும் அது அரியது, மிகவும் இனிமையானது. 1

ii) என்று தாமே தனித்து உண்ண மாட்டார்களாம் அதியமான் தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியை 1

iii) தான் உண்ணாமல், தன் ஆரூயிர்த் துணைவியார் பட்டத்து அரசியார்க்கும் கொடுக்காமல் 1

iv) தன் புதல்வன் பொருட்டெழினிக்கும் தராமல் தமிழ்ப் பெருமாட்டி ஔவையார்க்கு கொடுத்து நினைவு கூரத் தக்கது. 1

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுதல் : 1 × 4 = 4**

42. ''மலைகளிலே உயர்மலையை மகிழந்தணியும் நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில் விளை பொருள்ளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்தொழிலும் வாணிகமும், ஓங்கியசீர் நாடு''.

*அல்லது*

''குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிகள் அல்லராய் மாண்புடை யார்ச்சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது''.

***Ans.* :**

i) உயர்மலையாகிய இமயமலை அணியும் நாடு, பெரிய நதியாகிய கங்கை பெருகும் நாடு, உலகில் எல்லா விளைபொருள்களும் விளையும் நாடு. 2

ii) கைத்தொழிலும் வாணிகமும் வளரும் நாடு, கலைகளும், வேதப்பொருளும் அறியும் நாடு, கோவில்கள் நிறையும் நாடு சமய உண்மை விளங்கும் நாடு, பழமையும் புகழும் விளங்குகின்ற நல்ல நாடு பாரத நாடு. 2

*அல்லது*

***Ans.* :**

i) குழந்தைகள் நோயின்றி வாழ்தல் இனிதாகும். அவையில் தன் கருத்துக்களை அச்சப்படாமல் கூறுபவனின் கல்வி இனிதாகும். 2

ii) சோம்பல் தன்மை இல்லாத சான்றோர்களிடம் உள்ள செல்வம் குறையாமல் இருப்பதனால் இனிதாகும். 2

**XIII.** **பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருதல் :** **(2 × 2 = 4) 1 × 4 = 4**

சூரியன் தன் கிரணக்கைகளால் கடவுளைத் தொழவும் பறவைகள் தன் இன்னோசையால் ஆடிப்பாடி வணங்கவும், மரங்களெல்லாம் மலர்களைத் தூவி வழிபடவும், ஐம்பூதங்கள், தன் தொழில் செய்து போற்றவும், ஒலிக்கும் கடல் தன் அலைகளால் துதிக்கவும் செய்ய மனமே ! நீ மட்டும் இறைவனை வாழ்த்தி வணங்காதது ஏனோ ?

***வினாக்கள் :***

43. a) சூரியன் எவ்வாறு கடவுளைத் தொழுகிறான் ? 2

b) மரங்கள் எவ்வாறு இறைவனை வழிபடுகின்றது ? 2

***Ans.* :**

a) சூரியன் தன் கிரணக்கைகளால் கடவுளை தொழுகிறான். 2

b) மரங்களெல்லாம் மலர்களைத் தூவி வழிபடுகின்றது. 2

**XIV.** **மடல் எழுதுதல் :** **1 × 5 = 5**

44. சந்திரனில் கால் பதித்த சந்திராயன்-3 குறித்து உன் கருத்துக்களை உன் நண்பனுக்கு எழுதவும்.

***அல்லது***

நம் ஊரில் தொழிற்சாலைகள் அமைத்து இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருமாறு மாவட்ட ஆட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

***Ans.* :**

நாள் : 1

இடம் :

அன்புள்ள :

மதிப்பிற்குரிய :

கடிதப் பொருள் : 2

பெறுவோர் முகவரி : 1

இவண்

எழுதுவோர் பெயர் 1

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுல் : 1 × 5 = 5**

45. ''வேளாண் தொழிலின் முன்னேற்றமும் மற்றும் முக்கியத்துவமும்''

***அல்லது***

''கைபேசியின் பயன் குறித்து எழுதுக.''

***Ans.* :**

— தலைப்பிற்கேற்ற முன்னுரை 1

— தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள் 1

— கட்டுரையின் நோக்கம் நிறைவுறும் வகையில் வலியுறுத்தல் 2

— முடிவுரை 1